**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

} CC.No.70/2012

Deposition Of Witness for { Prosecution PW 1 / Defense / Court

Name அந்திரேயா சாமுவேல்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of October 2021.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். வழக்கின் புகார்தாரரை தெரியும் என்னுடைய மகன் அவர் இறந்துவிட்டார்.என்னுடைய மகன் 1 - வது எதிரியிடம் வேலை பார்த்து வந்தார். 24.07.2011 ஆம் தேதி இரவு 9.00 மணியளவில் பஸ்ஸ ில் இருந்து இறங்கி எங்கள் ஊர் நாடார் வாலிபர் சங்கம் அருகில் நின்றுகொண்டிருந்த போது சஞ்சய்குமார், ராஜா், மாணிக்கம் ஆகியோர் சேர்ந்து கெட்ட வார்த்தையால் ஏசி, சஞ்சய் குமார் என்பவர் என்னுடைய மகனை கீழே தள்ளி காலால் நெஞ்சில் மிதித்து, ராஜா கல்லை எடுத்து என் மகனின் இடதுகண் புருவத்தல் அடித்தார். மாணிக்கம் என்பவர் என் மகனை கம்பால் தலை மற்றும் உடல் முழுவதும் அடித்தார். பக்கத்தில் இருந்த துரைராஜ் நாடார், வெற்றி ஆகியோர் விலக்கிவிட்டனர். நான் சம்பவத்தின் போது வீட்டில் இருந்தேன். என்னுடைய மகனின் நண்பர் தோட்டாகுடியை சேர்ந்தவர் என் மகனை ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் சேர்த்துள்ளார். நான் என் மகனை காணவில்லை என்று தேடி கொண்டிருந்தோம். ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் இருந்து போன் மூலமாக தகவல் கிடைத்தது. நான் மகனை ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் சென்று பார்த்தேன். நான் மகனிடம் நடந்தது பற்றி கேட்ட போது மேற்படி மூன்று எதிரிகளும் தன்னை அடித்ததாக கூறினார். எதற்காக அடித்தார்கள் என கேட்ட போது சஞ்சய்குமார் வேறுஒரு அரசியல் கட்சியை சார்ந்தவர் என்பதாலும் என்னுடைய மகன் வேறு கட்சியை சார்ந்தவர் என்பதாலும் அவர்கள் இருவருக்கும் பிரச்சனை இருந்து வந்ததாகவும், அந்த முன்விரோதத்தில் அடித்ததாக கூறினார். காட்டப்படும் புகார் வாக்குமூலம் என் மகன் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து அவனுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 குறியிடப்படுகிறது. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**மறு விசாரணை இல்லை**